[2nd March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அனேகமாக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் முழுத்தொகையும் செலவு செய்யப்பட்டு வருகிறது. பலன் தரக்கூடிய திட்டங்களுக்கு இது செலவு செய்யப்பட வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த நிபந்தனையும் கிடையாது.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் பழைய ஏரிகளை மாத்திரம் தான் சரிப்படுத்தலாம் என்பதா அல்லது புது ஏரிகளையும் உற்பத்தி செய்யலாம் என்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நமது ராஜ்யத்தில் பழைய ஏரிகள் அதிகமாக இருக்கின்றன. அவைகளை சீர்படுத்தினால் அதிகமாக பலன் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆகவே புதிய ஏரிகளை ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை, அதோடு அது சுலபமும் அல்ல, சாத்தியமும் அல்ல.

Minor Engineering Industry workers

* 501 *Q.*—SRI M. KALYANASUNDARAM : (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Harihara Ayyar Tribunal has given an award for Minor Engineering Industry in October 1957, regarding the fixation of minimum wages, dearness allowance and apprenticeship;

(*b*) whether the award has been implemented at Coimbatore; and

(*c*) whether there is any proposal to implement the award at Madras City?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) In September 1957, two awards were given by the Labour Court, Coimbatore, and they relate to fixation of wages, dearness allowance, etc., to the workers of Textool Company Limited, Ramakrishna Industrials Limited, the P.S.G. & Sons, Charity Industrial Institute and Eastern Electricals Limited, Coimbatore.

(*b*) The award applies only to the four concerns referred to in clause (*a*). The managements and the workers of these companies have come to an agreement regarding the implementation of the terms of the award.

(*c*) No, Sir, as there is no provision in the Industrial Disputes Act to extend the terms of the award to other establishments which were not included as parties to the dispute at the time of reference.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த மைனர் இன்ஜினியரிங் தொழிலாளர்கள் சார்பாக, அவர்களுடைய சம்பளம், பஞ்சப்படி இவைகள் குறித்து ஒரு முக்கூட்டு கமிட்டி சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது. அப்படி யிருக்கும்போது அதையொட்டித் தான் இந்த தீர்ப்பின் அமைப்பு எப்படியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த முக்கூட்டு கமிட்டியினுடைய சிபாரிசுகள் அதிகமாக இந்த தீர்ப்பில் அடங்கியிருக்கின்றன.